[1978 செப்டம்பர் 1

* வினு 37—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஆண்-பெண் செவிலிய உதவியாளர்கள் (M.N.A.&F.N.A.) பயிற்சியை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இல்லை.

திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, ஏற்கனவே பயிற்சி பெருதவர்கள் இன்னும் அதிகமாக இருப்பதால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுமா? மேலும் இப்படிப் பயிற்சி பெருதவர்கள் எவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டு இருக்கிருர்கள் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: 1958 ஆம் ஆண்டு வரை அரசு செவிலிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு இருந்தவர்கள் இப்பயிற்சியைப் பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் பயிற்சி பெற்று விட்டார்கள் என்று தெரிய வருகிறது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த செவிலிய உதவியாளர்கள் நியமிப்பது எந்த ஆண்டு, யாரால் துவங்கப்பட்டது என்கிற விவரம் தெரிவிக்க இயலுமா? அந்தப் பணியாளர்களின் வேலை முறை என்ன என்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, 1927 ஆம் ஆண்டு வரை அவர்களுக்கு உரிய கல்வித் தகுதி, பயிற்சி ஆகியவை இல்லாமல் இருந்தது. 1927-ல் டாக்டர் பி. எப். மத்தியாஸ் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அக்குழு செவிலியர் பணி பற்றி முடிவு செய்து அறிக்கை அளித்தது. அப்படி செவிலிய உதவியாளர்களாக நியமனம் செய்யத் தகுதி—கல்வித் தகுதி 5 ஆம் வகுப்பு வரை படித்து இருக்க வேண்டும். அவர்களுக்குண்டான பணிகள்—

1978 செப்டம்பர் 1]

மருத்துவப் பகுதிகளைச் சுத்தம் செய்தல், புண்களுக்கு கட்டுப் போடுதல், நோயாளிகளுக்கு உணவு வழங்குதல், வார்டுகளில் தரை துடைத்தல் போன்றவை ஆகும்.

(முற்பகல் 9-50)

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து இந்தப் பணிகளைச் செய்யக்கூடிய செவிலியர்களை நியமிப்பதற்குப் பதில் ஏற்கெனவே பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஏராளமான பேர்கள் விண்ணப்பம் போட்டும் கிடைக்காமல் இருக்கும்போது புதிய ஆட்களை நியமித்தது உண்டா ? அதை எதிர்த்து பல இடங்களில் ஆஸ்பத்திரிகளிலே நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, பயிற்சிப் பெறாதவர்கள் யாரும் எங்கும் நியமிக்கப்படவில்லை. அப்படி எங்காவது நியமிக்கப்பட்டதாக எந்தவிதமான குற்றச்சாட்டும் இதுவரையில் அரசுக் வரவில்லை. எங்காவது தவறு நடந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பெருமாள் : தலைவரவர்களே, கணவனை இழந்து வேலையில்லாத செவிலியர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வயது வரம்பைத் தளர்த்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, 'மென் நர்சிங் அசிஸ்ட்டெண்ட்' 'ஃபிமேல் நர்சிங் அசிஸ்ட்டெண்ட்'—இவர்கள் சங்கத்தின் சார்பில் தரையை துடைத்து சுத்தம் செய்யும் பணியில் எங்களை ஈடுபடுத்தக் கூடாது, புண்ணை சுத்தம் செய்தல், பெட்டை சுத்தம் செய்தல் போன்ற பணிகளைத்தான்

செய்வோம் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா? 1927 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைதான் இதுவரை இருக்கிற காரணத்தால் அதை மறுபரிசீலனை செய்து அவர்கள் வேலைகளைப் பற்றி வரன்முறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: செவிலியர் உதவியாளர்கள் இன்னின்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஒரு வரன்முறை ஏற்கெனவே வைத்திருக்கிறார்கள். அதன்படி பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், நோயாளிகளுக்குப் படுக்கை விரித்தல், அறுவை சிகிச்சைக்கு முன் நோயாளிகளைச் சுத்தம் செய்தல், காயங்களைச் சுத்தம் செய்தல், எனிமா கொடுத்தல், பண்டகசாலையிலிருந்து அறுவை சிகிச்சைக்குத் தேவையான பொருள்களை எடுத்து வருதல், பண்டகசாலையிலிருந்து இரத்தம் நிறைக்கப்பட்ட பாட்டில்களை அறுவை சிகிச்சை கூடத்திற்கு எடுத்து வருதல், அங்கிருந்து காலி பாட்டில்களை பண்டகசாலைக்கு எடுத்துச் செல்லுதல், மருத்துவர்களுக்கு கைகளைச் சுத்தம் செய்ய தண்ணீர் கொடுத்தல், அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தும் கத்தி போன்ற பொருட்களை சுத்தம் செய்தல், பண்டகசாலையிலிருந்து தேவையான மருந்து, மாத்திரைகள், ஊசிமருந்துகளைத் தேவைக்கு ஏற்றபடி வாங்கி வருதல், நோயாளிகளின் புண்ணைச் சுத்தம் செய்து கட்டுப் போடுதல் போன்ற பணிகள் என்று வரன்முறை செய்யப் பட்டிருக்கிறது. இதிலே மாற்றம் வேண்டுமென்று பொதுவாக அவர்களுடைய சங்கத்திலிருந்து தரப்பட்ட மனுக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

அனாதை இல்லங்களுக்கான உதவித் தொகை.

*வினா 38—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் அனாதை இல்லங்களில் பயிலும் குழந்தைகளுக்கு அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் உதவித் தொகை எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?